புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியர் **பிபின் சந்திரா** கடந்த 30-08-2014 அன்று மரணமடைந்தார். இவர் ஹிமாச்சல் பிரதேசத்தைச் சார்ந்தவர்.

**ஆகஸ்டு 29 - தேசிய விளையாட்டு தினம்** . இந்திய ஹாக்கி வீரர் தயான் சந்த் அவர்களின் பிறந்த தினத்தில் கொண்டாடப்படுகிறது.

**பிரதம மந்திரி மக்கள் நிதி திட்டம் (Pradhan Mantri Jan Dhan Yojana)** கடந்த 28-08-2014 அன்று பிரதமரால் துவக்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு வங்கி கணக்குகள் துவங்கப்படும்.

**விளையாட்டிற்கான தேசிய விருதுகள் - 2014**

அர்ஜூனா விருது - விளையாட்டுத்துறையில் தொடர்ந்து 4 வருடங்களாக மிக சிறந்து விளங்கிய நபர்களுக்கு வழங்கப்படுகின்றது. இவ்விருதில் 5 இலட்சம் ரூபாய் தொகையும், சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்படுகிறது .

(கீழ்க்கண்ட விளையாட்டு வீரர்களையும் அவர்கள் தொடர்புடைய விளையாட்டுகளையும் மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்)

Jai Bhagwan - Boxing
V. Diju - Shuttler
Heena Sidhu - Shooter
Abhishek Verma - Archery
Tintu Luka -Athletics
H.N. Girisha - Para-Athletics
Geethu Anna Jose - Basketball
R. Ashwin - Cricket
Anirban Lahiri - Golf
Mamta Pujari - Kabaddi
Saji Thomas - Rowing
Anaka Alankamony - Squash
Tom Joseph - Volleyball
Renubala Chanu - Weightlifting
Sunil Kumar Rana - Wrestling

**துரோணாச்சார்யா விருதுகள் 2014** - சிறந்த பயிற்றுனர்களுக்கு வழங்கப்படுகிறது . இவ்விருதில் ரூ.5 இலட்சம் தொகை, பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

1.Gurcharan Singh Gogi - Judo
2.G. Manoharan - Boxing
3.Jose Jacob - Rowing
4.N. Lingappa - Athletics
5.Mahabir Prasad - Wrestling

**தயான்சந்த் விருது 2014** - விளையாட்டுத்துறையில் வாழ் நாள் சாதனைக்காக வழங்கப்படுகிறது

1.Gurmail Singh - Hockey
2.K.P. Thakkar - Swimming-Diving
3.Zeeshan Ali - Tennis

**டென்சிங் நார்கே விருது 2013** - இவ்விருது சாகஷ வீரர்களுக்கு வழங்கப்படுகிறது .
1.Subedar Jagat Singh - Land Adventure
2.Passang Tenzing Sherpa - Land Adventure
3.MWO Surender Singh - Air Adventure

Warning : Only for TNPSC Portal Members. Do not republish in websites and blogs .

4.Wg. Cdr. (Retd) Amit Chowdhury -Lifetime Achievement

இவை தவிர **ராஷ்டிரிய கேல் புரோட்ஸான் புரஷ்கார் விருது** என்ற விருது விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களைத் தவிர விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்கு சிறந்த பங்களித்த நபர்கள்/ நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது .

சமீபத்தில் பிரதமர் நரேந்திய மோடியால் அமைக்கப்பட்ட " வழக்கொழிந்த சட்டங்களைக் கண்ட்றியும் குழு" வின் தலைவர் - **R.இராமானுஜம்**

ஆந்திராவிற்கு புதிய தலைநகர் அமைப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் - **சிவராமகிருஷ்ணன்**

துருக்கியின் 12 ஆவது அதிபராக **ரேசிப் தாயிப்** பதவியேற்றுள்ளார்

Interpol (சர்வதேச போலீஸ்) ன் நல்லெண்ண தூதுவராக சமீபத்தில் நியமிக்கப்பட்ட இந்திய நடிகர் - **ஷாருக்கான்**

**கிழக்கிந்தியாவிற்கான ஆற்றல் நெடுஞ்சாலை திட்டம்** (Energy Highway for Eastern India) - பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் 25-08-2014 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

ஜகதீஸ்பூர் - பூல்பூர்-ஹால்டியா இயற்கை வாயு குழாய் திட்டமானது , GAIL னால் நடைமுறைப்படுத்தப்படும். இயற்கை வாயு குழாயின் முலம் எடுத்து சென்று கிழக்கு மாநிலங்களுக்கு வழங்கப்படும்.

மேற்கு வங்கம், ஜார்க்கண்ட், உத்தர பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும்.

**டாட் பாரத் (Dot Bharat)** இந்திய அரசின் இணையதள வசதி ஆரம்பிக்கப்பட்டது. முதல்கட்டமாக இந்தி, போடோ, டோக்ரி, கொங்கணி, மைதிலி, மராத்தி, நேபாளி மற்றும் சிந்தி மொழிகளில் இந்த வசதி அறிமுகப்படுத்தப்படும்.

Dot Bharat என்பது நடைமுறையிலிருக்கும் .com, .in, .org போன்ற இணைய தள முகவரிகளுக்கு மாற்றாக .bharat என கொண்டு வருவதற்கான முயற்சி. இதன் மூலம் இந்திய மொழிகளில் இணைய தள பயன்பாட்டை கொண்டுவர ஊக்குவிக்கப்படும்.

**ALS நோயின் முழுப்பெயர்** - Amyotrophic lateral sclerosis

மெக்சிகோவில் லாகுனிடா மற்றும் தாம்சென் என இரண்டு புதிய **மாயன் நாகரிகத்தை சார்ந்த நகரங்கள்** அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்படுள்ளன.

இந்திய - ரஸிய இராணுவ கூட்டு பயிற்சி - **ஏவியா இந்திரா 2014** - ரஸியாவின் காஸ்பியன் கடலிலின் அருகிலுள்ள ஆஸ்ட்ராகான் பகுதியில் துவங்கியது.

**சமீபத்தில் எந்த நாட்டின் ஜனாதிபதி பொருளாதார கொள்கைகளைக் காரணம் காட்டி அரசை கலைத்தார்** - பிரான்சு

**"Not Just an Accountant"** என்ற புத்தகத்தின் ஆசிரியர் - முன்னாள் Comptroller and Auditor General (CAG) - வினோத் ராய்

**இந்தியாவின் முதல் "இந்திய பொறியியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம்"** Indian Institute of Engineering Science and Technology (IIEST) - சிப்பூர், கொளரா ( மேற்குவங்கம்) வில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

சமீபத்தில் கைத்தறி நெசவாளர்களின் உற்த்திப்பொருள்களை இணையத்தில் விற்பனை செய்வதற்காக் , மத்திய ஜவுளித்துறையினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட இணையதள சந்தை நிறுவனம் - **Flipkart**

சமீபத்தில் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் எதிர்கட்சியான தொழிலாளர் கட்சியின் சார்பில் நிழல் அமைச்சராக (shadow minister) நியமிக்கப்பட்டுள்ள முதல் இந்திய வம்சாவழியைச் சார்ந்த பெண்மணி - **சீமா மல்கோத்ரா**

"Gandhi" திரைப்படத்திற்காக ஆஸ்கார் விருது பெற்ற ஹாலிவுட் இயக்குநர் **ரிச்சர்ட் ஆடன்பரோ** மரணமடைந்தார். இவர் இயக்கிய காந்தி திரைப்படத்திற்கு 8 ஆஸ்கர் விருதுகள் வழங்கப்பட்டன.

Warning : Only for TNPSC Portal Members. Do not republish in websites and blogs .

"Gandhi" திரைப்படம் மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை கூறும் இந்த திரைப்படம் 1982 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

**SMAP (Soil Moisture Active Passive)செயற்கைக் கோள்** - நாசாவின் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட இச்செயற்கை கோளின் மூலம் வறட்சிக்கான காரணிகளை அறிந்து அதனை தடுக்கலாம்.

**உலகின் மிகப்பழமையான தாமிரத்திலானால் உலோகம்** இஸ்ரவேலின் டெல் ட்சாப் பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவின் முதல் எத்தனாலினால் இயங்கும் பேருந்து** 22-08-2014 அன்று மத்திய அரசினால் நாக்பூரில் துவக்கி வைக்கப்பட்டது.
**துருக்கி நாட்டின் புதிய பிரதமர்** - அஹமது தவுதோக்லு ( Ahmet Davutoglu )

**INS காமோத்ரா** - இந்தியாவின் முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஸ்டெல்த் (stealth) போர்க்கப்பல் 23-08-2014 அன்று பாதுகாப்புத்துறை அமைச்சர் அருண் ஜெட்லி அவர்களால் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

சமீபத்தில் விஞ்ஞானி **M.S.சுவாமிநாதன் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிய பாகிஸ்தான் பல்கலைக்கழகம் -** பைசல்பாத் விவசாய பல்கலைக்கழகம்.

**தாய்லாந்தின் புதிய (29 வது) பிரதமர்** - பிரயுத் சான் ஒச்சா

**ராஜூவ் காந்தி சாத்பவன் விருது , 2014** - திரைப்பட தயாரிப்பாளர் முஷாபர் அலி க்கு வழங்கப்பட்டுள்ளது.

விருது பற்றி : இவ்விருது 1992 ஆம் ஆண்டு முதல் அகில இந்திய காங்கிரஸ் கட்சியினால் சமூக ஒற்றுமைக்கு சிறப்பான பங்காற்றும் நபருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**உலகிலேயே முதல் சுற்று சூழல் சார்ந்து உருவாக்கப்பட்ட இந்து கோயில் (eco temple)** "சுவாமிநாராயண் மண்டிர்" சமீபத்தில் எந்த நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. - இங்கிலாந்து

சமீபத்தில் **பாராளுமன்ற பொது கணக்கு குழுவின் 94 வது தலைவராக நியமிக்கப்பட்டவர்** - KV தாமஸ் (காங்கிரஸ் கட்சி)

**இந்திய சுதந்திர தினம் - சில தகவல்கள்**

இந்திய தேசிய காங்கிரசின் 1929 ஆம் ஆண்டின் லாகூர் கூட்டத்தில் 'பூரண சுதந்திர பிரகடனம்' உருவாக்கப்பட்டது.மேலும் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 26 ஐ சுதந்திர தினமாக அனுசரிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 1930 முதல் 1947 வரை ஜனவரி 26 ம் தேதி சுதந்திர தினமாக அறிவிக்கப்பட்டது.

மௌண்ட் பேட்டன் திட்டப்படி உலகப்போரில் ஜப்பான் சரணடைந்த தினத்தின் இரண்டாம் ஆண்டு நினைவுதினத்தை குறிப்பதாக 15-08-1947 ஆம் நாள் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கப்பட்ட போது இங்கிலாந்தில் தொழிலாளர் கட்சியை சார்ந்த கிளமண்ட் அட்லீ பொரதமராக இருந்தார்.

மத்திய பணியாளர் தேர்வாணயத்தின் (UPSC) புதிய தலைவராக அடுத்த 6 ஆண்டுகளுக்கு பணிபுரிய நியமிக்கப்பட்டுள்ளவர் **- ரஜினி ரஸ்தான்**

<u>UPSC பற்றி சில தகவல்கள்</u>

இந்திய அரசியலமைப்பின் 315 வது சரத்தின் படி அமைக்கப்பட்டுள்ளது.
இதில் ஒரு தலைவரும் 10 உறுப்பினர்களும் அடங்கியுள்ளனர்.

Warning : Only for TNPSC Portal Members. Do not republish in websites and blogs .

1926 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட UPSC க்கு அரசியலமைப்பு அங்கீகாரம் 1950 ஆம் ஆண்டில் தான் வழங்கப்பட்டது.

இந்தியாவின் முதல் பாராளுமன்றத்தில் உறுப்பினராக அங்கம் வகித்த **ரேஷ்மலால் ஜாங்கடே** கடந்த ஆகஸ்டு 12 ம் நாள் மரணமடைந்தார். இவர் மத்திய பிரதேசத்தை சார்ந்தவர்.

இந்தியாவில் 1952 பொதுத்தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாராளுமன்றத்தில்

எதிர்க்கட்சி தலைவர் - ஏ.கே.கோபாலன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி.

லோக்சபா சபாநாயகர் - கணேஷ் வாசுதேவ் மவ்லாங்கர் (தாதா சாகிப்)

**ராஜிவ் காந்தி கேல் ரத்னா விருது - 2014** - க்கு கபில் தேவ் தலைமையிலான தேர்வுக்குழு ஒரு நபரையும் தெரிவு செய்யவில்லை.

ராஜிவ் காந்தி கேல்ரத்னா விருது பற்றி

விளையாட்டுத் துறையினருக்கு வழங்கப்படும் நாட்டிலேயே உயர்ந்த விருது

1991-1992 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் ஒருவருக்கும் விருது வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்று 1993-1994 ஆம் ஆண்டிலும் ஒருவருக்கும் விருது வழங்கப்படவில்லை.

**சமீபத்திய முக்கிய விளையாட்டு வீரர்களும் அவர்கள் தொடர்பான விளையாட்டுகளும்**

ஜீவா மில்கா சிங் - கோல்ப்
சோம்தேவ் வர்மன் - டென்னிஸ்
PVசிந்து - பேட்மின்டன்
கிரிஷ்ணா பூனியா, விகாஸ் கொளடா - அத்லெடிக்

இந்திய கிரிக்கெட் குழுவின் புதிய இயக்குனராக **ரவி சாஸ்திரி** நியமிக்கப்பட்டுள்ளார் .

சமீபத்தில் மரணமடைந்த " ஈரானின் பெண்சிங்கம்" என அழைக்கப்படும் ஈரானிய கவிஞர் - **சிமின் பெஹ்பஹானி**

சமீபத்தில் இந்தியாவுடன் இரயில்வே தொழில்நுட்ப ஒப்பந்தம் செய்துகொண்ட நாடு - **செக் குடியரசு**

**INS Kolkata - சில தகவல்கள்**

கடந்த 16-08-2014 அன்று பிரதமர் மோடி அவர்களால் நாட்டிற்கு அற்பணிக்கப்பட்டது
இந்தியாவின் முதல் , மிகப்பெரிய உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கிகப்பல்களை எதிர்க்கும் போர்கப்பல்.

**உலக மனிதாபிமான தினம்** (World Humanitarian Day) - 19-20-2014 அன்று அனுசரிக்கப்பட்டது.

சமீபத்தில் வெளியிடப்பட்ட **Assassination of Rajiv Gandhi: An Inside Job?** (ராஜிவ்காந்தி படுகொலை) என்ற புத்தகத்தின் ஆசிரியர் -வினோத் மேத்தா

சமீபத்தில் டெபிட் கார்டுகளின் மூலம் தவணை முறை (EMI Facility) யை இந்தியாவில் அறிமுகப்படுத்திய முதல் வங்கி - **ICICI Bank**

Warning : Only for TNPSC Portal Members. Do not republish in websites and blogs .

சமீபத்தில் ரஷியாவை சார்ந்த இணையதள ஹேக்கர்கள் (Hackers) 1.2 பில்லியன் மின்னஞ்சல் முகவரிகளை **"BOTNET" என்கிற ஹேக்கிங் முறையை** பயன்படுத்தி திருடினார்கள்.

**"Strictly Personal, Manmohan and Gursharan"** என்ற புத்தகத்தின் ஆசிரியர் - டாமன் சிங்

**"Munger through the Ages"** என்ற புத்தகத்தின் ஆசிரியர் - தேவேந்திர பிரசாத் யாதவ்

சமீபத்தில் பிரதமர் நரேந்திரமோடி அவர்களால் வெளியிடப்பட்ட **"Gujarat's success story in Water Management"** என்ற புத்தகத்தின் ஆசிரியர் - சிறீராம் வேதிர்

சமீபத்தில் செய்திகளில் வந்த **"SHERLOC"** என்பது அமெரிக்காவின் நாசாவினால் Mars 2020 rover mission மூலம் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்படவிருக்கிற செயற்கைக் கோள். இந்த செயற்கைக் கோள் 2021 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத்தை அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வில்வித்தைக்கான உலகக்கோப்பையில் தங்கம் வென்ற இந்திய பெண்மணி** - தீபிகா குமாரி

**சமீபத்தில் சர்வதேச கால்பந்து போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஜெர்மனியை சார்ந்த புகழ்பெற்ற கால்பந்து வீரர் -** மிரோஸ்லாவ் க்ளோஸ்

சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடியால் அடிக்கல் நாட்டப்பட்ட நீர்மின்நிலையங்களான சூடக் மற்றும் நிமோ பாஸ்கோ (Chutak and Nimoo Bazgo ) **நீர்மின் நிலையங்கள் எந்த மாநிலத்தில் உள்ளன** - ஜம்மு காஷ்மீர்

**கடந்த ஆகஸ்டு 11 ல் மரணமடைந்த இந்தியாவின் முதல் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த அரசியல்வாதி** - ரேசாம்லால் ஜாங்கட் (மட்திய பிரதேசம்)

"**மிகச்சிறந்த பாராளுமன்றவாதிகள் விருதுகள்**" (outstanding Parliamentarian Awards) ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவர்களால் அருண் ஜெட்லி(2010 ஆம் ஆண்டுக்காக) , கரண் சிங்(2011 ஆம் ஆண்டுக்காக), சரத் யாதவ்(2012 ஆம் ஆண்டுக்காக) ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

சமீபத்தில் உத்தரபிரதேசத்தின் பாக்பட் மாவட்டத்திலுள்ள சண்டயான் கிராமத்தில் **"ஹரப்பா நாகரிகத்தை' ச்சார்ந்த தலையில் தாமிரத்திலான கிரீடத்துடன் கூடிய எலுக் கூடும்பு** கண்டெடுக்கப்பட்டது

**தமிழக இராணுவ மேஜர் முகுந்துக்கு "அசோக் சக்ரா விருது"** - ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளுடன் நடந்த மோதலில் கடந்த ஏப்ரல் 2014 ல் உயிரிழந்தவர் மேஜர்.முகுந்த்.

**ஃபீல்ட்ஸ் பதக்கம் 2014 (கணித நோபல் பரிசு என அழைக்கப்படுகிறது) -** இந்திய வம்சாவழியை சார்ந்த கனடாவில் பிறந்த மன்சுல் பார்கவாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

**அஞ்சல் குறியீட்டு எண் - சில தகவல்கள்**

1972 ஆகஸ்டு 15 ஆம் ஆண்டில் தான் இந்திய தபால் துறை அஞ்சல் குறியீட்டு எண்ணை அறிமுகப்படுத்தியது. இந்த வருடம் 2014 இதற்கு 42 ஆவது ஆண்டு ஆகும்.

6 இலக்கங்கள் கொண்ட இந்த அஞ்சல் குறியீட்டில் நாட்டை 8 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு ஆரம்ப எண்கள் கொடுத்து அனைத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த 6 இலக்க எண்களில், முதல் எண் மாநிலத்தையும், 2 மற்றும் 3 ஆம் எண்கள் அஞ்சல் பிரிப்பகத்தின் துணை மண்டலங்கள், மாவட்டங்களையும் குறிப்பதாக அமைகின்றன. இறுதி 3 எண்கள் தபால் பட்டுவாடா நிலையங்களை குறிப்பதாக உள்ளன.

இந்தியாவில் முதலாவது பின்கோடு கொண்ட தபால் நிலையம் புதுடில்லி தபால் நிலையம் ஆகும். இதன் எண் 110001. ( நன்றி : தி இந்து)

Warning : Only for TNPSC Portal Members. Do not republish in websites and blogs .

**குறைந்த பட்ச கூலி சட்டம்** - 1948

**ரோஜர் கோப்பை 2014 -** கனடாவின் டோரண்டோ நகரில் நடைபெற்ற இந்த ஆண்டு ரோஜர் கோப்பையில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் வில்ப்ரைட் சோங்காவும் (பிரான்ஸ்)
பெண்கள் ஒற்றையர் பிரிவில் போலந்தின் அக்னிஸ்கா ரத்வன்ஸ்காவும் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்கள்.

**உலக யானைகள் தினம்** - ஆகஸ்டு 12

**நூலகர் தினம்** - ஆகஸ்டு 12

**வால்நட்சத்திரத்தை (Comet) சென்றடைந்த உலகின் முதல் செயற்கைக் கோள்** - ஐரோப்பிய விண்வெளி கழகத்தின் 'ரோசெட்டோ செயற்கை கோள்' 6-8-2014 ல் 67P/Churyumov-Gerasimenko என்ற வால் நட்சத்திரத்தை சென்றடைந்துள்ளது .

**எபோலா வைரஸ் - உலக சுகாதார நிறுவனம் சர்வதேச சுகாதார அவசர நிலையை அறிவித்துள்ளது.**

<u>எபோலா நோய் - அறிமுகம்</u>

1976 ஆம் ஆண்டு இலண்டனைச் சார்ந்த பேராசிரியர் பீட்டர் பியோட் என்பவரால் காங்கோ நாட்டின் 'எபோலா' நதிக்கரையிலுள்ள யம்பிகோ என்ற பட்டணத்தில் கண்டறியப்பட்டது.

பழ வௌவால்களின் மூலமும், நோய் கிருமி தாக்கத்துக்குள்ளான இதர விலங்குகளின் மூலமும் பரவுகிறது.

**Strictly Personal, Manmohan and Gursharan என்ற புத்தகத்தின் ஆசிரியர்** - டாமன் சிங்

**இந்தியாவில் அமைக்கப்படும் உலகிலேயே நீளமான இரயில்வே பாலம்** - மணிப்பூர் மாநிலத்தின் நானீ (Noney) பகுதியில் அமைக்கப்பட்டு வருகிறது

**இராணுவத்துறையில் அந்நிய முதலீடு 26 சதவீதத்திலிருந்து 49 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.** முதல் முறையாக இராணுவத்துறையில் அந்நிய முதலீடு 2001 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் தங்கம் வென்ற **பாருபள்ளி காஷ்யப்** (Parupalli Kashyap) தொடர்புடைய விளையாட்டு - பேட்மிண்டன்

சமீபத்தில் **லண்டன் ராயல் சொசைட்டியால் காப்ளே விருது 2014** பெற்ற (Copley Medal 2014 ) DNA விரல்ரேகை முறையினை (DNA fingerprinting) கண்டுபிடித்த அறிவியலாளர் - சர்.அலெக் ஜெஃப்ரீஸ் (Sir Alec Jeffreys) (1984)

லண்டன் ராயல் சொசைட்டியால் வழங்கப்படும் காப்ளே விருது 1731 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இது தான் உலகிலேயே பழமையான அறிவியல் விருதாக கருதப்படுகிறது.

**சமீபத்தில் 2020 ஆம் ஆண்டிற்குள்ளாக நிலக்கரி பயன்பாட்டை தடைசெய்ய வேண்டும் என திட்டமிட்டுள்ள நாடு -** சீனா

**சிறுவர் நீதி சட்ட திருத்த மசோதா , 2014** - மத்திய காபினட் ஒப்புதல் பெற்றது.

சிறுவர் நீதி சட்டம், 2000 த்தின் மீதான இச்சட்ட திருத்தம் கற்பளிப்பு போன்ற கொடிய தவறுகளைச் செய்யும் 16 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை பெரியவர்களாகக் கருதப்படும்.

**முதல் உலகப்போர் நடந்து முடிந்த 100 வது ஆண்டு.**

உலகம் முழுவதும் 04-08-2014 அன்று முதல் உலகப்போரின் 100 ஆவது ஆண்டு தினம் அனுசரிக்கப்பட்டது.

Warning : Only for TNPSC Portal Members. Do not republish in websites and blogs .

முதல் உலகப்போர் ஆகஸ்டு 4 , 1914 முதல் நவம்பர் 11, 1918 வரை நடைபெற்றது.

இந்த 100 வது நினைவு ஆண்டை பாராளுமன்றத்தில் அனுசரித்த முதல் நாடு நியூசிலாந்து ஆகும்.

**Container Corporation of India Limited (CONCOR) விற்கு நவரத்தினா தகுதி** . கடந்த ஜூலை 23, 2014 அன்று இந்நிறுவனத்திற்கு மத்திய அரசின் நவரத்தின தகுதி வழங்கப்பட்டுள்ளது.

**நாசாவின் மார்ஸ் - 2020 மிஷன்** - செவ்வாய் கிரகத்தில் உயிர்வாழும் சாத்தியக்கூறுகளை ஆராய அனுப்ப பட உள்ளது.

**சமீபத்தில் ஆப்பிரிக்க பெங்குவின்களின் தொடர்பு பாஷையை ஆராய்ந்து கண்டறிந்தவர்கள்** - லிவியோ பாவரோ (Dr Livio Favaro) தலைமையிலான இத்தாலிய அறிவியலறிஞர்கள்.

**இங்கிலாந்து நாட்டின் காபினட் அமைச்சரான முதல் முஸ்லிம் பெண்மணி** சயீதா வார்சி (பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்டவர்) இஸ்ரேல் - பாலஸ்தீன போரில் இங்கிலாந்தின் அணுகுமுறையால் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.

தேசிய பெண்களுக்கான கவுன்சில் (National Commission for Women) தலைமை பொறுப்பிலிருந்த மம்தா ஷர்மாவின் பதவி காலம் கடந்த ஆகஸ்டு 1, 2014 ல் முடிந்தது.

National Commission for Women 1992 ஆம் ஆண்டு National Commission for Women Act, 1990 சட்டத்தின் படி அமைக்கப்பட்டது.

இதுவரை அதிக பட்சமாக இரண்டு முறை இதன் தலைவராக இருந்தவர் கிரிஜா வியாஸ்.

**20 வது காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் 2014**

ஸ்காட்லாந்து நாட்டின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்று முடிந்துள்ளது.

இந்தியா 15 தங்கம், 30 வெள்ளி மற்றும் 19 வெண்கலம் என மொத்தம் 64 பதக்கங்களுடன் 5 வது இடத்தை பெற்றது. முதலிடத்தில் இங்கிலாந்தும், இரண்டாவது இடத்தில் ஆஸ்திரேலியா, மூன்றாம் இடத்தில் கனடாவும் உள்ளன.

தமிழகத்தை சார்ந்த தீபிகா பள்ளிக்கல் மற்றும் ஜோஷ்னா சின்னப்பா ஆகியோர் பெண்களுக்கான ஸ்குவாஷ் போட்டியில் தங்கம் வென்றுள்ளார்கள்.

முதல் காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் 1930 ஆம் ஆண்டில் கனடாவின் ஹாமில்டன் நகரில் நடைபெற்றது.

காமன்வெல்த் அமைப்பின் தற்போதைய உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை - 53

**பிரதமர் மோடியின் நேபாள விஜயம்** - இது 17 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற்ற இரு நாடுகளுக்கிடையேயான நடைபெற்ற முக்கியமான அரசியல் ரீதியான சந்திப்பாகும்.

**RBI ன் புதிய துணை கவர்னர்** - சுபாஷ் செராட்டன் முந்த்ரா ( Subhash Sheoratan Mundra )

ராஜீவ் காந்தி தேசிய சாத்பவனா விருது (Rajiv Gandhi National Sadbhavana Award) 2014 - சமூக ஒற்றுமை, அமைதி மற்றும் நல்லெண்ணத்திற்காக பாடுபட்டதற்காக முஷாபர் அலி க்கு வழங்கப்படுகிறது. ஏற்கனவே Padmasri விருது பெற்ற முஷாபர் அலி பாலிவுட் இனிமா துறையைச் சார்ந்தவர் ஆவர்.

ராஜீவ் காந்தி தேசிய சாத்பவனா விருது - அறிமுகம்

Warning : Only for TNPSC Portal Members. Do not republish in websites and blogs .

ராஜீவ் காந்தி தேசிய சாத்பவனா விருது சமூக ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு, அமைதிக்காக சிறப்பாக பங்காற்றியவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இவ்விருது 1992 ஆம் ஆண்டு முதல் ராஜீவ் காந்தி பிறந்த நாள் நினைவாக ஒவ்வொரு வருடமும் ஆகஸ்டு 20 ஆம் நாள் வழங்கப்பட்டுவருகிறது.

ஒவ்வொரு வருடமும் ஆகஸ்டு 20 ஆம் நாள் ஒருமைப்பாடு தினமாக (Sadbhavna Diwas (Harmony Day)) கொண்டாடப்படுகிறது.

இவ்விருது முதல்முறையாக அன்னை (Mother Teresa) தெரசா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**One Life is Not Enough என்ற புத்தகத்தின் ஆசிரியர்** - நட்வர் சிங்

**பல்கலைக் கழக மானியக் குழு (Universities Grants Commission's (UGC)) வின் தற்போதைய நிலையினைப்பற்றி ஆராய 2014 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குழுவின் தலைவர்** - ஹரி கவுதம் (Hari Gautam)

**ராமன் மகசாசே விருது 2014**

இந்த வருட ராமன் மகசாசே விருது 5 தனி நபர்கள் மற்றும் ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது.

விருது பெற்றவர்கள்

1.ஹூ சூலி (Hu Shuli) - சீன பத்திரிக்கையாளர்
2. சார் மர்லினா மனுரங் (Saur Marlina Manurung) - இந்தோனேசியா - குழந்தைகள் நலனுக்காக பாடுபட்டவர்
3.ஒமெரா கான் மசௌதி (Omara Khan Masoudi ) - ஆப்கானிஸ்தானின் கலாச்சார பெருமையை பாதுகாக்க பாடுபட்டவர்.
4.தி சிட்டிஷன் பவுண்டேசன் (The Citizens Foundation) பாகிஸ்தான் - பாகிஸ்தானில் கல்விக்காக உழைத்த நிறுவனம்
5.வாங் கான்ஃபா (Wang Canfa) , சீனா - சீனாவில் சுற்றுசூழல் பாதுகாப்புக்காக பாடுபட்டவர்.
6.ராண்டி ஹாலசான், பிலிப்பைன்ஸ் - பிலிப்பைன்ஸ் நாட்டு மலைவாழ் மக்களுக்காக உழைத்ததற்காக.

**<u>ராமன் மகசாசே விருது - அறிமுகம்</u>**

ஆசியாவிலேயே மிகவும் உயரிய விருதான இவ்விருது 1957 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. மறைந்த முன்னாள் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியின் பெயரில் சமூக நலனுக்காக பாடுபடும் ஆசியாவை சார்ந்த தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அன்பான **TNPSC Portal** உறுப்பினர்களே,

இந்த சமீபத்திய செய்திகள் TNPSC, TNUSRB தேர்வுகளுக்கு தயாராகும் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம், இவற்றை நீங்கள் படித்து பயன்பெறுவதோடு உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து கொள்ளுங்கள். இந்த தொகுப்பில் விடுபட்ட தகவல்கள் ஏதாவது இருந்தால் , அனைவரும் பயன்பெறும் வண்ணம் எங்களுக்கு தெரிவியுங்கள். உங்கள் கேள்விகள் ,கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை தெரிவிக்க mail@tnpscportal.in என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள் . உங்கள் மேலான ஆதரவிற்கு நன்றி !

குறிப்பு : இந்த சமீபத்திய செய்திகள் தொகுப்பு www.tnpscportal.in உறுப்பினர்களின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. இதை வேறெந்த இணைய தளங்களிலோ (website) வலைப்பூக்களிலோ (blogs) வெளியிடுவது தடை செய்யப்படுகிறது.